நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பயறுவகைப் பயிர்களில் அதிக மகசூல் தரும் டிஏபி கரைசல்**

First Published : 28 Oct 2010 11:02:40 AM IST

வேலூர், அக். 27: குறிப்பிட்ட அளவு டிஏபி கரைசலை தெளித்தால், பயறு வகை பயிர்களில் அதிக மகசூல் பெறலாம்.

பயறு வகைகளில் 20 முதல் 24 சதவீத புரதச்சத்து உள்ளது. இச்சத்து உற்பத்தியாவதற்கு மணிச்சத்து அவசியம். மண்ணில் இருந்து கிடைப்பதை விட, தாவரங்களின் இலை வழியாக மணிச்சத்து எளிதாக கிடைக்கிறது.

பூக்கும் பருவத்துக்குப் பிறகு பயிர்களின் வேர்களில் ஊட்டச்சத்து எடுக்கும் தன்மை குறைந்து விடும். எனவே தழைச்சத்து, மணிச்சத்து கொண்ட டிஏபி கரைசலை இலை வழியாக தெளிப்பதன் மூலம் பயன் கிடைக்கும்.

பூக்கும் தருணத்தில் 2 சதவீதம் டிஏபி கரைசலை (லிட்டருக்கு 20 கிராம்) 2 முறை தெளிக்க வேண்டும். ஒரு ஹெக்டருக்கு 625 லிட்டர் டிஏபி கரைசல் தேவைப்படும். இவற்றை கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

முதலில் 12.5 கிலோ டிஏபி உரத்தை 10 லீட்டர் நீரில் கலந்து, ஒரு பிளாஸ்டிக் வாளியில் ஊற வைக்க வேண்டும். மறுநாள் வாளியின் மேல் தெளிந்திருக்கும் நீரை வடிகட்டி எடுக்க வேண்டும். இதில் நீர் சேர்த்து 625 லிட்டர் கரைசல் தயாரித்துக் கொள்ளலாம்.

இந்த கரைசலை கைத்தெளிப்பான் மூலம் இலைகளில் நன்கு படும்படி மாலை நேரங்களில் தெளிக்க வேண்டும். பயறு வகை பயிர்களுக்கு பூக்கும் ஒரு வாரத்திற்கு முன்பும், பூத்த ஒரு வாரத்திற்கு பின்பும் இரு முறை தெளிக்க வேண்டும்.

2 சதவீதத்திற்கும் அதிகமாக டிஏபி உபயோகித்தால், இலைகள் கருகிவிடும். எனவே, நிர்ணயிக்கப்பட்ட அளவை மட்டும் உபயோகிப்பது நல்லது. பூச்சி மருத்துகளை சேர்த்து தெளிக்கக் கூடாது என்று ஆர்க்காடு வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாவு பூச்சி தாக்குதலில் இருந்து பயிரை காப்பது எப்படி?

First Published : 28 Oct 2010 11:02:23 AM IST

தருமபுரி, அக்.27: மாவு பூச்சி தாக்குதலில் இருந்து ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையில் பயிரை பாதுகாக்கலாம் என வேளாண் வல்லுநர்கள் தெரிவித்தனர்.

தருமபுரி மாவட்டத்தில் தற்போது பரவலாக மாவு பூச்சிகளின் பயிர் தாக்குதல் உள்ளது. குறிப்பாக பப்பாளி, கொய்யா மற்றும் மரவள்ளிக் கிழங்குகளில் இத்தாக்குதல்கள் அதிகம் உள்ளது. இப்பூச்சிக்கள் பயிர்களின் சாற்றை உறிஞ்சுவதால் செடிகள் விரைவில் காய்ந்துபோகும், செடியின் நுனிப்பகுதி புதர் போன்று காணப்படும்.

இப்பூச்சிக்கள் இனிப்பு சுவையான கழிவுப் பொருளை வெளியேற்றும். இது எறும்புகளை கவர்ந்து, பூச்சிகள் பரவ காரணமாகிறது. இப்பூச்சிகளின் மீது மெழுகு போன்ற பொருள் காணப்படுவதால், இவற்றை முழுமையாகக் கட்டுப்படுத்துவதும் கடினம். இதை ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மூலமே கட்டுப்படுத்த முடியும்.

வயல் வரப்புகளில் உள்ள பார்த்தீனியம் போன்ற களைகள் மற்றும் பிற உதிர்ந்த குப்பைகளை அகற்ற வேண்டும். இதன் மூலம் இப்பூச்சிக்களின் உணவை தடை செய்ய முடியும். தாக்குதலுக்குள்ளான செடிகளை வேருடன் பிடுங்கி எரிய வேண்டும். இம்முறையில் மற்ற பயிர்களுக்கு பூச்சிகள் பரவுவதைத் தடுக்க முடியும்.

பயறு வகைகளை ஓர்பயிராக சாகுபடி செய்ய வேண்டும். இதனால் இரைவிழுங்கியான கிரிட்டோ லேமஸ் பொறி வண்டின் புழுக்கள் அதிகம் உற்பத்தியாகி மாவு பூச்சிக்களை உண்ணும். இப்பூச்சிக்களுடன் எரும்பு சேர்த்து கட்டுப்படுத்துவதால், மாவு பூச்சிக்கள் பரவாமல் தடுக்க முடியும்.

தாக்குதல்கள் அதிமாக உள்ள போது ரசாயன மருந்துகளை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

1) கார்பரில் 50 சதவீதம் 2.5 கிலோ. 2) தையோடிகார்ப் 75 சதவீதம் 750 கிராம். 3) புரப்பனோபாஸ் 25 சதவீதம் 1.25 லிட்டர். 4) குயினல்பாஸ் 25 சதவீதம் 2 லிட்டர். 5) குளோர்பைரிபாஸ் 25 சதவீதம் 2.5 லிட்டர் இவைகளில் ஏதேனும் ஒன்றை பூச்சிகளைக் கட்டுப்படுத்த உபயோகிக்கலாம். 15 நாள்களுக்கு ஒரு முறை ஏக்கருக்கு, 200 லிட்டர் நீரில் மேற்கண்ட அளவில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் செடிகளின் மேல், அடிப்புறம் மற்றும் தண்டு பகுதிகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். மேலும் எண்ணெய் 2 மி.லி இதில் சேர்க்க வேண்டும்.

இதனுடன் ஒட்டும் திரவம் அல்லது காதி சோப்பு கலந்து 5 நாள்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும் என்கிறார் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பொ.மனோகரன்.

**இயற்கை விவசாயிகள் மாநாடு: குமரியில் இன்று தொடக்கம்**

First Published : 28 Oct 2010 01:15:45 PM IST

கன்னியாகுமரி, அக். 27: கன்னியாகுமரியில் மாநில அளவிலான முதலாவது இயற்கை விவசாயிகள் மாநாடு வியாழக்கிழமை (அக். 28) தொடங்குகிறது.

2 நாள்கள் நடைபெறும் இம்மாநாட்டை, ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ தொடக்கி வைக்கிறார்.

இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார், தேசிய விவசாய ஊரக வளர்ச்சி வங்கி உதவி பொதுமேலாளர் சங்கர் ஆகியோர் பேசுகின்றனர்.

மாநாட்டை, நாகர்கோவில் டெவலப்மென்ட் பாலிசி ரிஸர்ச் சென்டர் மற்றும் மஹாராஷ்டிரம், அவுரங்காபாத்தில் அமைந்துள்ள இன்ஸ்டிடியூட் பார் இன்டகிரேட்டட் ரூரல் டெவலப்மென்ட் ஆகியவை இணைந்து நடத்துகின்றன.

இயற்கை வேளாண்மை தொடர்பாக குறுந்தொழில்கள் தொடங்கி, இயற்கை வேளாண்மையில் ஒரு நிலைத்த தன்மை பெற வேண்டும் என்பதை மையமாகக் கொண்டு இம்மாநாடு நடத்தப்படுகிறது.

மாநாட்டில், தமிழ்நாடு முழுவதுமிருந்து இயற்கை விவசாயிகள், இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் தொண்டு நிறுவன பிரதிநிதிகள்,
இயற்கை உணவுப் பொருள்கள் தயாரிப்பவர்கள், ஏற்றுமதியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள் பங்கேற்க உள்ளனர்.

மாநாட்டுக்கான ஏற்பாடுகளை, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஜாய் டேனியல் செய்து வருகிறார்.

**நெல் விவசாயத்தை பாதுகாக்க கோரிக்கை**

First Published : 28 Oct 2010 01:15:04 PM IST

கருங்கல், அக்.27:÷கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நெல் விவசாயத்தைப் பாதுகாக்க குளம்,குட்டைகளை ஆழப்படுத்த வேண்டும் என மாவட்ட காங்கிரஸ் சேவாதள அமைப்பாளர் காட்வின் கோரிக்கை விடுத்துள்ளார்.

÷இது குறித்து மாவட்ட ஆட்சியருக்கு அவர் அனுப்பியுள்ள மனு:

÷கன்னியாகுமரி மாவட்டத்தில் 15 ஆண்டுகளுக்கு முன் நெல் விவசாயம் அதிக அளவில் இருந்து வந்தது. நெல் விவசாயம் மூலம் கிடைக்கும் வைக்கோல் விவசாயிகளின் கால்நடைகளுக்கு உணவாக அதிக அளவில் பயன்பட்டு வந்தது. மேலும் இந்த கால்நடைகள் மூலம் இயற்கை உரமும் கிடைத்து வந்தது.

÷இந்நிலையில் தற்போது குளம்,குட்டைகளில் மண் மற்றும் பாசிகள் நிரம்பி அதிக அளவு தண்ணீர் தேங்காமல் இருப்பதாலும் மற்றும் கூலித் தொழிலாளர்கள் தட்டுப்பாடு, ஊதிய உயர்வு,பூச்சிகள் நெல் பயிரை அதிக அளவு தாக்குதல்,உரங்களின் விலை உயர்வு ஆகிய காரணத்தால் விவசாயிகள் நெல் விவசாயம் செய்ய அதிக ஆர்வம் காட்டுவதில்லை.

÷எனவே நெல் விளைநிலங்களில் வாழை, ரப்பர், மரச்சீனி உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். இம்மாவட்டத்தில் நாளுக்கு நாள் மக்கள் நெருக்கடி அதிகமாவதால் விவசாய நிலங்களை மண் நிரப்பி கட்டடங்கள் கட்டி வீட்டு மனைகளாக ஆக்குகின்றனர்.

÷எனவே மாவட்ட நிர்வாகம் தலையிட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து குளம்,குட்டைகளை ஆழப்படுத்தி நன்செய் நிலங்களில் நெல் விவசாயம் அதிகரிக்க விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என்றார் அவர்.

**விதையில்லாத மரக்கன்று உற்பத்தி பயிற்சி**

First Published : 28 Oct 2010 12:29:03 PM IST

ஆலங்குடி, செப். 27: ஆலங்குடி அருகேயுள்ள தோப்புக்கொல்லை வனவியல் விரிவாக்க மையத்தில் விதையில்லாத மரக்கன்றுகளை உற்பத்தி செய்யும் பயிற்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

பயிற்சிக்கு உதவி வனப் பாதுகாவலர் என். தங்கராஜ் தலைமை வகித்தார்.

வனச் சரகர் எஸ். கதிரேசன், வனவர் எம். வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் விதையில்லாத உயர் ரக மரக்கன்றுகளை உற்பத்தி செய்வது குறித்து மரக்கன்று உற்பத்தியாளர் அரிமளம் பி. செல்வராஜ் பயிற்சி அளித்தார்.

இந்தப் பயிற்சியில் மகளிர் சுய உதவிக் குழுவினர் பங்கேற்றனர்.

**நாளை விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம்**

First Published : 28 Oct 2010 01:33:32 PM IST

திருவள்ளூர், அக். 27: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்ப்புக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் டி.பி. ராஜேஷ் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் வேளாண்மைத் துறை, வருவாய்த்துறை, மின்வாரியம், கூட்டுறவுத் துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மை பொறியியல் துறை, மீன் வளத்துறை, கால்நடைத்துறை உள்ளிட்ட விவசாயம் சார்ந்த அனைத்து துறை அதிகாரிகளும் பங்கேற்கின்றனர்.

எனவே இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் இக்கூட்டத்தில் பங்கேற்று பயன்பெற வேண்டும் என ஆட்சியர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 2500 வழங்க வலியுறுத்தல்**

First Published : 28 Oct 2010 12:25:50 PM IST

அரியலூர், அக். 27: நடப்புப் பருவத்துக்கு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 2500 வழங்க வேண்டும் என திருமானூர் கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம் அரசை வலியுறுத்தியுள்ளது.

இந்தச் சங்கத்தின் செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழப்மை திருமானூரில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு சங்கத் தலைவர் ப. முருகானந்தம் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

கோத்தாரி சர்க்கரை ஆலை விவசாயிகளுக்குத் தர வேண்டிய எஸ்.எம்.பி. பாக்கித் தொகையை அரவைத் தொடங்குவதற்கு முன்னர் வழங்க வேண்டும். விவசாயிகளின் எரிந்த கரும்பை எடுக்கும் போது, டன் ஒன்றுக்கு ரூ. 150 பிடித்தம் செய்வதை உடனே நிறுத்த வேண்டும்.

கரும்புப் பதிவு செய்த விவசாயிகளுக்கு சொட்டு நீர், உரம், பூச்சிக்கொல்லி மருந்து, ஜிப்சம் ஆகியவற்றை 25 சத மானியத்தில் வழங்கி உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு ரேஷன் விலையில் டன் ஒன்றுக்கு 1 கிலோ வீதம் சர்க்கரையை ஆலை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் இலந்தைக்கூடம் ஊராட்சித் தலைவர் குமரவேல், சட்ட ஆலோசகர் சந்திரசேகர், தனக்கன், துரைசாமி, கௌரவத் தலைவர் ராமையாப்பிள்ளை, துணைத் தலைவர் அன்பு கணேசன், அன்னிமங்கலம் பி. கலியமூர்த்தி, கீழப்பழூர் ரமேஷ், மேலப்பழூர் துணைத் தலைவர் பிச்சை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிறைவில் இணைச் செயலர் ஜி. சுயம்பிரகாசம் நன்றி கூறினார்.

**கால்நடை வளர்ப்புக்கு மானியக் கடன்!**

First Published : 28 Oct 2010 11:03:02 AM IST

கிருஷ்ணகிரி, அக்.27: கால்நடை வளர்போருக்கு மானியத்துடன் கடன்களை மத்திய அரசு வழங்கி வருகிறது என நபார்டு வங்கியின் உதவி பொதுமேலாளர் வி. திருமலை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியது:

தொழில்முனைவோருக்கு சிறு பால்பண்ணை அமைக்க 5 லட்சம் கடன் வழங்கப்படுகிறது. கன்று வளர்த்தல் திட்டத்தில் 5 முதல் 20 கன்றுகள் வளர்க்க 4.80 லட்சம் கடன் வழங்கப்படுகிறது.

பால் பண்ணை வைத்துள்ளோர், மண் புழு உரம் தயாரிக்க அதிக பட்சமாக 20 ஆயிரம் கடன் வழங்கப்படுறது. பால் கறக்கும் கருவிகள், குளிர்சாதன வசதியுடன் பால் போக்குவரத்து சாதனங்கள் வாங்கவும், பால் குளிரூட்டு நிலையம் அமைக்கவும் கடன்கள் வழங்கப்படுகின்றன.

மேற்கண்ட கடன் பெற பிணத் தொகையாக 10 சதவீதம் பயனாளி வழங்க வேண்டும். பொது பிரிவினருக்கு 25 சதவீதமும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 33.33 சதவீதமும் மானியம் வழங்கப்படுகிறது.

20 பெண் மற்றும் 4 ஆண் பன்றிகள் வளர்க்க அதிகபட்சமாக திட்ட மதிப்பீடு 6 லட்சமாகும். இதற்கு 25 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

உயிருள்ள பன்றி விற்பனை நிலையம் அமைக்க 5 லட்சம் கடனும் 50 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

ஆண் எருமைக் கன்றுகள் வளர்க்க (1 முதல் 9 கன்றுகள்) குறுகிய காலக் கடனாக, கன்று ஒன்றுக்கு வட்டியில்லாமல் 6,400 வழங்கப்படுகிறது. 10 முதல் 50 கன்றுகள் வளர்க்க நீண்ட கால கடனாக (4 முதல் 6 ஆண்டுகளுக்கு) ஒரு கன்றுக்கு 8,750 வீதம் 25 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டங்கள் மூலம் பயனடைய விரும்புவோர் அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவமனை மூலமாக விண்ணப்பிக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

**தோட்டக் கலை இயக்க திட்டப் பயிலரங்கு**

First Published : 28 Oct 2010 09:57:48 AM IST

தேனி, அக். 27:உத்தமபாளையத்தில் தோட்டக் கலைத் துறை சார்பில் தேசிய தோட்டக் கலை இயக்கத் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் மானிய உதவிகள் குறித்த பயிலரங்கு நடைபெற்றது. மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் முருகன் தலைமை வகித்தார். உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஆலிவர் முன்னிலை வகித்தார். பெரியகுளம் தோட்டக் கலைக் கல்லூரி உதவி பேராசிரியர்கள் சுப்பையா, எம்.இந்திரா, மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் அழகு நாகேந்திரன், துணைத் தோட்டக் கலை அலுவலர் மருதுபாண்டி, உதவி வேளாண்மை அலுவலர்கள் பாலு, மாரிமுத்து ஆகியோர் பேசினர். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

உத்தமபாளையம் தோட்டக்கலை உதவி இயக்குநர் பி.ராஜன் பேசியதாவது:தோட்டக்கலை இயக்கத் திட்டத்தில் புதிதாக மா, நெல்லி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு 30 ஆயிரமும், வாழையில் கிழங்கு மூலம் சாகுபடி செய்வதற்கு ஒரு ஹெக்டேருக்கு 16 ஆயிரத்து

875, திசு வாழை சாகுபடிக்கு 31 ஆயிரத்து 202, கோகோ, கொட்டை முந்திரி சாகுபடிக்கு 20 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.

மிளகாய் பயிருக்கு ஹெக்டேருக்கு 12 ஆயிரத்து 500, உதிரி மலர் சாகுபடிக்கு 12 ஆயிரம், கிழங்கு வகை பயிர்களுக்கு 40 ஆயிரம், பழைய தோட்டத்தை புதுப்பிக்கும் திட்டத்தில் மா, கொட்டை முந்திரி சாகுபடிக்கு 15 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது.

மா, வாழை உற்பத்தி திறனைப் பெருக்கும் வகையில் அடர் நடவு முறையில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்துச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு 40 ஆயிரம் மூன்று ஆண்டுகளுக்கு மானியமாக வழங்கப்படுகிறது என்றார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அதிகாரிகள் சுப்பிரமணி, பாண்டியன் ஆகியோர் செய்திருந்தனர்.

தினமலர்

**பருத்தியில் களை கட்டுப்படுத்த புதிய தொழில் நுட்பம்: துணைவேந்தர் தகவல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,01:34 IST

கோவை: பருத்தி பயிர்களின் இடையே உள்ள களைகளை கட்டுப்படுத்தும் "போல்கார்டு ரவுண்டு அப் பிளெக்ஸ் காட்டன்' தொழில் நுட்ப பயிற்சி, கோவை வேளாண் பல்கலையில் நடந்தது.
விழாவில் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது: ஆண்டுக்கு ஒன்பது லட்சம் பேல் பருத்தி இறக்குமதி செய்து வந்த நாம், நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களை பயன்படுத்தியதால், இன்று ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உயர்ந்துள்ளோம்.

2002ல் பி.டி. பருத்தி அறிமுகத்துக்குப் பின் பருத்தி உற்பத்தி 290 லட்சம் பேல்களாக உயர்ந்து, இன்று உலகளவில் இரண்டாமிடத்தில் உள்ளோம். இந்தியாவில் இன்று மொத்த பருத்தி சாகுபடி பரப்பில் 90 சதவீதம் பி.டி., பருத்தி பயிரிடப்படுகிறது. மொத்த பருத்தி சாகுபடியில் 20 சதவீத செலவு, பூச்சி கட்டுப்பாட்டுக்கு செலவிடப்படுகிறது. இன்று பூச்சிகொல்லி மருந்து பயன்படுத்துவது குறைந்துள்ளது. இது தான் பி.டி.பருத்தியின் வெற்றிக்கு காரணம். அதிக பூச்சிமருந்து தெளிக்க தேவை இல்லாததால், இந்திய விவசாயிகள் பி.டி. பருத்தியை விரும்பி பயிரிடுகின்றனர்.

பி.டி. கத்தரியை சாப்பிட்டால் புற்றுநோய் வரும் எனக் கூறப்படுவது தவறு.பருத்தி சாகுபடியில் பூச்சி தாக்குதலுக்கு அடுத்தபடியாக, களைகளால் 42 சதவீதம் வரை மகசூல் இழப்பு ஏற்படுகிறது. கூலியாட்கள் பற்றாக்குறை உள்ள இந்த காலகட்டத்தில் களைகளை கட்டுப்படுத்துவது பெரும் பிரச்னையாக உள்ளது. ஒரு எக்டரில் இரண்டு முறை களை எடுக்க, 8,700 ரூபாய் செலவாகிறது.

ஆனால் "ரவுண்டு அப் ரெடி ப்ளெக்ஸ்' எனப்படும் பருத்தி ரகத்தை பயிரிடும்போது, இரு முறையும் களைக்கொல்லியை பயன்படுத்தியே களைகளை கட்டுப்படுத்தலாம். களைகொல்லி தெளிப்பதால் பருத்திக்கு எந்த சேதமும் வராது. இந்த முறையில் களைகளை கட்டுப்படுத்த, ஒரு எக்டருக்கு 3,600 ரூபாய் மட்டுமே செலவாகும். களைக்கொல்லியை தாங்கி வளரக் கூடிய தன்மை கொண்ட பருத்தி ரகத்தை சோதனை செய்ய, கோவை வேளாண் பல்கலையில் 2008ல் "மகிக்கோ மான்சான்டோ உயிர்த் தொழில் நுட்ப நிறுவனம்' ஒரு ஆராய்ச்சித் திட்டத்தை ஏற்படுத்தியது. இதன் வாயிலாக, அதிக பூச்சி எதிர்ப்பு திறன் கொண்ட, களைகொல்லியை தாங்கி வளரக்கூடிய "ரவுண்டு அப் ரெடி பிளெக்ஸ்' பருத்தி ரகம் பயிரிடப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. இதனை பயன்படுத்துவதன் மூலம், களை கட்டுப்படுத்தும் செலவு 50 சதவீதம் வரை குறைக்கப்பட்டது. பருத்தி உற்பத்தி எக்டருக்கு 2,985 கிலோ அளவுக்கு எடுக்கப்பட்டது.

சாதாரணமாக எக்டருக்கு 2,200 கிலோ மட்டுமே எடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. பி.டி. பருத்தியைப் போலவே, "ரவுண்டு அப் ரெடி பிளெக்ஸ்' பருத்தியும் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார். மன்சான்டோ நிறுவன மும்பை அதிகாரி சந்தானு தாஸ்குப்தா பேசியது: பி.டி. பருத்தியின் உதவியால் உலக பருத்தி உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 65 சதவீதமாக உயர்ந்துள்ளது.

பி.டி.பருத்தி தொழில் நுட்பம் வெற்றி அடைந்துள்ளதால், ஆள் பற்றாக்குறை, களை, வறட்சி, பூச்சிக் கட்டுப்பாடு ஆகிய சவால்கள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. பருத்தி களை மேலாண்மை தொழில் நுட்பத்தில் ஈடுபட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்களின் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பம்தான் "போல்கார்ட் 2 ரவுண்டு அப் ரெடி பிளெக்ஸ். இது,செயல்திறன் மிக்க களைகளை அடியோடு அழிக்கிறது. மண்ணின் தன்மையை மேம்படுத்துகிறது, என்றார். பதிவாளர் சுப்பையன், வேளாண் ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா, வேளாண் அலுவலர்கள், ஆராய்ச்சியாளர்கள், விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**தேயிலைத் தோட்டங்களுக்கு உரம்:அங்கத்தினர்களுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,01:25 IST

மஞ்சூர்: "உரம் தேவைப்படும் அங்கத்தினர்கள், தொழிற்சாலையை அணுக வேண்டும்' என, தொழிற்சாலை தனி அலுவலர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். மஞ்சூர் மற்றும் சுற்றுவட்டாரத்தில்

உள்ள கிண்ணக்கொரை, பிக்கட்டி, எடக்காடு, மேற்குநாடு, இத்தலார், கைகாட்டி, மகாலிங்கம் உட்பட கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில், 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அங்கத்தினர்களாக உள்ளனர். பருவமழை சமயத்தில், தேயிலைத் தோட்டத்தில் உரமிட்டு பராமரிக்க, தொழிற்சாலை நிர்வாகம் சார்பில் அங்கத்தினர்களுக்கு உரம் வழங்கப்படுகிறது. உரத்துக்கான பணத்தை, அங்கத்தினர்கள் வினியோகிக்கும் பசுந்தேயிலை மூலம் மாதந்தோறும் குறிப்பிட்ட அளவு பிடித்தம் செய்யப்படுகிறது.
கடந்த ஜனவரி மாதத்திலிருந்து, மஞ்சூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் போதிய மழை இல்லாததால், தேயிலை விவசாயிகள் உரம் இட தயக்கம் காட்டுகின்றனர். அவ்வப்போது பொழிந்த மழையை பயன்படுத்தி, சிலர் உரமிட்டனர். தொடர்ந்து, வெயிலின் தாக்கம் அதிகரித்ததால், பணியை நிறுத்தினர். கடந்த மூன்று நாட்களாக, மஞ்சூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பரவலாக மழை பொழிந்து வருவதால், தேயிலைத் தோட்டங்கள் ஈரப்பதம் கண்டுள்ளன. விவசாயிகளுக்கு உரம் வினியோகிக்க, கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை நிர்வாகங்கள் முடிவெடுத்துள்ளன.
ஒவ்வொரு கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில், அங்கத்தினர்களின் தேவைக்கேற்ப உரம் வரவழைக்கப்பட்டு வினியோகிக்கப்பட உள்ளது. ஒரு கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைக்கு குறைந்தது 200 டன் முதல் 250 டன் வரை உரம் தேவை இருப்பதாக கூறப்படுகிறது. உரம் தேவைப்படும் அங்கத்தினர்கள், தொழிற்சாலையை அணுக வேண்டும் என, அந்தந்த தொழிற்சாலை தனி அலுவலர்கள் சார்பில், சுற்றறிக்கை மூலம், அங்கத்தினர்களுக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு மண் புழு உரம் தயாரித்தல் பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,02:46 IST

குளித்தலை: குளித்தலை அருகே கழுகூரில் விவசாயிகளுக்கு மண் புழு புரம் தயாரிக்கும் பயிற்சி, கழுகூர் பஞ்சாயத்து தலைவர் மணிமேகலை தலைமையில் நடந்தது. யுனியன் கவுன்சிலர் கர்ணன், வேளாண்மை அலுவலர் கண்ணதாசன் முன்னிலை வகித்தனர், வேளாண்மை உதவி இயக்குனர் காதர் மொஹிதின் வரவேற்றார்.இயற்கை வேளாண்மையில் மண்புழு உரம் மற்றும் அதன் முக்கியத்துவம் , அரசின் பல்வேறு வேளாண்மை மானியத்திட்டங்கள், நிலத்தில் நுண்ணுயிர் பாதுகாக்கும் முறை குறித்து மாவட்ட துணை இயக்குனர் சவுந்தரராஜன் விளக்கினார்.

புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் விஜய், இயற்கை விவசாயத்தில் விவசாயிகள் மீன் கரைசல், அமிர்த கரைசல், எலுமிச்சை கரைசல், பஞ்சகாவியா

தயாரித்தல், நீரில் கரையும் உரம் , துல்லிய பண்ணயதிட்டத்தில் அரசின் மானிய திட்டம் குறித்து பேசினார். பயிற்சியில் கழுகூர் பஞ்சாயத்து  விவசாயிகள் பங்கேற்றனர்.

## சொட்டு நீர் பாசனத்துக்கு 65% மானியம் அறிவிப்பு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,02:46 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் வெளியிட்ட அறிக்கை: தற்போது கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் சாகுபடி செய்யப்படும் காய்கறி, பழமரம், மலர், தென்தைன, வாழை, மரவள்ளி பயிருக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க 65 சதவீதம் மானியம் அரசு அளிக்கிறது.கிடைக்கும் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, பயிர் செய்யும் பரப்பினை அதிகப்படுத்தவும், மகசூலை அதிகரிக்கவும், உரம் சேமிப்பு, களை அகற்றம் உள்ளிட்ட பலன் சொட்டு நீர் பாசனம் மூலமாக கிடைக்கிறது. தண்ணீர் விரயமாவது தடுக்கப்படுகிறது.

மா, கொய்யா, வெண்டை, கத்தரி, தக்காளி, தென்னை, வாழை, மரவள்ளி மற்றும் முல்லை, ரோஜா, மல்லிகை சாகுபடி செய்யலாம். நடப்பாண்டு சொட்டு நீர்பாசனம் அமைக்கும் விவசாயிக்கு அரசு 65 சதவீதம் மானியம் அளிக்கிறது. ஒரு ஹெக்டேருக்கு அதிகபட்சமாக 37 ஆயிரத்து 440 ரூபாய் வழங்கப்படுகிறது. சொட்டு நீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிக்கு, மானிய தொகை நீங்கலாக விவசாயியுடைய பங்கு தொகைக்கு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கடன் வழங்கப்படுகிறது.சொட்டு நீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயி, தங்கள் பகுதி தோட்டக்கலை அலுவலர் அல்லது கூட்டுறவு சங்கத்தை தொடர்பு கொள்ள வேண்டும்.

## 11,000 மெட்ரிக் டன் யூரியா கையிருப்பு : திருவாரூர் மாவட்ட வேளாண் அதிகாரி தகவல்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,02:18 IST

திருத்துறைப்பூண்டி: ""திருவாரூர் மாவட்டத்துக்கு தற்போது தேவையான 11 ஆயிரம் மெட்ரிக் டன் யூரியா உரம் கையிருப்பில் உள்ளது,'' என மாவட்ட வேளாண் துணை இயக்குனர் கோவிந்தசாமி தெரிவித்தார். திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி நெடும்பலம் அரசு விதைப்பண்ணையில் ராஜராஜன் 1000 முறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதை வேளாண் துணை இயக்குனர் கோவிந்தசாமி ஆய்வு செய்து, ஒன்பது பயனாளிகளுக்கு மூன்று லட்சத்து 22 ஆயிரத்து 25 ரூபாய் மதிப்புடைய விசை உழுவை, விசைகளை மிதிக்கும் கருவி,

கைத்தெளிப்பான், தார்பாய், மண்வெட்டி மற்றும் நீர் கொண்டு செல்லும் பாசனக்குழாய் ஆகியவற்றை 50 சதவீத மானிய விலையில் வழங்கி பேசியதாவது: திருவாரூர் மாவட்டத்தில் இந்தாண்டு சம்பா மற்றும் தாளடி பருவத்தில் மூன்று லட்சத்து 62 ஆயிரத்து 42 ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், இதுவரை இரண்டு லட்சத்து 77 ஆயிரத்து 782 ஏக்கர் சாகுபடி நிறைவு பெற்றுள்ளது. எஞ்சிய 84 ஆயிரத்து 260 ஏக்கரில் இம்மாத இறுதிக்குள் நடவு முடிந்துவிடும். ராஜராஜன் 1000 சாகுபடி முறையில் 96 ஆயிரத்து 842 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ள 11 ஆயிரத்து 957 ஹெக்டேரில் இதுவரை பத்தாயிரத்து 438 ஹெக்டேரில் அறுவடை பணி முடிந்துள்ளது. சராசரி மகசூலாக ஹெக்டேருக்கு ஐந்தாயிரத்து 518 கிலோ மகசூல் கிடைத்துள்ளது.

ராஜராஜன் 1000 முறையில் சாகுபடி செய்யப்பட்டதில் ஒரு ஹெக்டேரில் அதிகப்பட்சமாக ஒன்பதாயிரத்து 500 கிலோ கிடைக்கப்பெற்றுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் நடப்பு மாதம் வரை சாகுபடி செய்யப்பட்டுள்ள பரப்புக்கு தேவையான யூரியா உரம் 11 ஆயிரத்து 200 மெட்ரிக் டன், டி.ஏ.பி., 3,900 மெட்ரிக் டன், பொட்டாஷ் 2,500 மெட்ரிக் டன் மற்றும் காம்ப்ளக்ஸ் 1,120 மெட்ரிக் டன் என 18 ஆயிரத்து 720 மெட்ரிக் டன் கணக்கிடப்பட்டுள்ளது. இதுவரை 9,924 மெட்ரிக் டன் உரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் யூரியா 3,205 டன், டி.ஏ.பி., 3,178 டன், பொட்டாஷ் ஆயிரத்து 471 டன்னும், தனி உரக்கடைகளில் யூரியா 1,612 டன், பொட்டாஷ் 463 டன், காம்ப்ளக்ஸ் 907 டன் என பத்தாயிரத்து 836 டன் உரம் கையிருப்பில் உள்ளது. இவ்வாறு துணை இயக்குனர் தெரிவித்தார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ஞானசேகரன், துணை இயக்குனர் கபிலன், வேளாண் உதவி இயக்குனர்கள் திருத்துறைப்பூண்டி நடேசன், முத்துப்பேட்டை சிவகுமார், உதவி வேளாண் அலுவலர்கள் பாலசுப்பிரமணியன், ஜஸ்டின், துணை வேளாண் அலுவலர் தவமணி உட்பட பலர் உடனிருந்தனர்.

**விவசாயத்துறையில் புதிய தொழில் நுட்ப ஆராய்ச்சி அவசியம்: துணை ஜனாதிபதி பேச்சு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 28,2010,23:44 IST

திண்டுக்கல் : ""இந்திய மக்களின் வாழ்வாதாரத்தை மையமாக கொண்டுள்ள விவசாயத்துறையில், புதிய தொழில் நுட்ப ஆராய்ச்சி அவசியம்'' என, துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி பேசினார். திண்டுக்கல் மாவட்டம் காந்தி கிராம கிராமிய பல்கலை.,யின் 28 வது பட்டமளிப்பு விழா நடந்தது.

துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி ஆற்றிய பட்டமளிப்பு உரை: மகாத்மா காந்தியின் "புதிய கல்வி' திட்டத்தை செயல்படுத்தும் வகையில், 1956 ல் இப்பல்கலை., உருவானது. கிராம

வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தரும் வகையில், இங்குள்ள கல்விமுறையை இந்தியா மற்றும் சர்வதேச நாடுகள் அங்கீகரித்துள்ளது. 1941ல் ஜமீயா நகரில் அடிப்படை கல்வி குறித்த 2 வது தேசிய கருத்தரங்கம் நடந்தது. அதில் டாக்டர் ஜாகீர் உசேன் பேசுகையில், "பள்ளிகல்வி என்பது தன்னை சுற்றியுள்ள சமுதாயத்தின் சேவையை மையமாக கொண்டிருக்க வேண்டும்,'என்றார். காந்தி கிராம பல்கலை., இச்சேவையை தான் செய்கிறது. இக்கொள்கையை மாணவர்களாகிய நீங்கள் உங்கள் தொழில், வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும்.

இந்திய மக்களின் வாழ்வாதாரத்தை மையமாக கொண்டுள்ள விவசாயத்துறையில் புதிய தொழில் நுட்ப ஆராய்ச்சி அவசியம். வரும் ஐந்தாண்டு திட்டத்தில், விவசாயத்துறைக்கு முக்கியத்துவம் தந்து, ஏழை மக்களின் வாழ்க்கை மேம்படவும், ஏழ்மையை ஒழிக்கும் வகையிலும் புதிய திட்டங்கள் தேவை. தரிசு நிலங்களை மேம்படுத்த கூடுதல் கவனமும், பண்ணை விவசாயத்திற்கு முக்கியத்துவமும் தர வேண்டும். விவசாய தொழில் நுட்ப வளர்ச்சிக்காக நாட்டின் மொத்த உற்பத்தியில் ஒரு சதவீதம் ஒதுக்க வேண்டும். விவசாய பல்கலைகள் ஆராய்ச்சி முறைகளில் புதிய உத்திகளை கையாள வேண்டும். தனியார் நிறுவனங்கள் புதிய தொழில் நுட்பங்களை பின்பற்றி, பருத்தி, மக்காச்சோளம், சூரியகாந்தி, நெல் உற்பத்தியில் சாதனை செய்துள்ளனர். விவசாயிகளால் வரவேற்கும் புதிய தொழில்நுட்பங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

துணைவேந்தர் எஸ்.எம். ராமசாமி வரவேற்றார். பதிவாளர் எம். சிவராமன், அமைச்சர் ஐ. பெரியசாமி, சித்தன் எம்.பி., கலெக்டர் வள்ளலார், காந்திகிராம அறக்கட்டளை நிர்வாக இயக்குனர் கவுசல்யா தேவி உட்பட பலர் பங்கேற்றனர். பாரம்பரிய விவசாயம் குறித்து ஆராய்ச்சி செய்துவரும் சென்னையை சேர்ந்த வி.பாலசுப்பிரமணியத்திற்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. 32 பேருக்கு டாக்டர் பட்டமும், 51 பேருக்கு தங்க பதக்கம் மற்றும் 1,131 பேருக்கு விவசாயத்துறையில் புதிய தொழில் நுட்ப

பாதியில் சென்ற அமைச்சர்: காந்திகிராம பல்கலையில் நேற்று நடந்த பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க வந்த துணை ஜனாதிபதி அன்சாரியுடன் தமிழக வணிக வரித்துறை அமைச்சர் உபயதுல்லா வந்தார். காந்திகிராமத்திற்கு வந்தபோது அவரது மகன் இறந்து விட்டதாக வந்த தகவலையடுத்து, நிகழ்ச்சியில் பங்கேற்காமல் தஞ்சை சென்றார். கன்னிவாடியில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றிருந்த அமைச்சர் பெரியசாமி பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றார்.

## நெல் பயிர் சாகுபடியில் அதிக மகசூல் : வேளாண் அலுவலர் யோசனை

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,00:37 IST

செய்துங்கநல்லூர் : நெல் பயிரிடும் விவசாயிகள் விதை நேர்த்தி செய்து விதைக்கும்படி கருங்குளம் வேளாண்மை அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார்.
கருங்குளம் வேளாண் அலுவலர் அஜ்மல்கான் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, கருங்குளம் வட்டார விவசாயிகள் சம்பா நெற்பயிர் சாகுபடியில் விதை நேர்த்தி செய்து வீரியமான விதைகளை தெரிவு செய்து விதை மூலம் பரவும் பூச்சி, நோய் தாக்குதலை குறைத்து அதிக மகசூல் பெறுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். சான்றிதழ் பெற்ற விதைகளை 1 கிலோ சமையல் உப்புடன் 10 லிட்டர் நீரில் கரைத்து ஏற்படும் கரைசலில் ஊறவைக்க வேண்டும். அப்போது கரைசலில் மிதக்கும் விதைகளை அப்புறப்படுத்த வேண்டும். பின்னர் நல்ல நீரில் விதைகளை கழுவ வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் விதைப்பதற்கு முன்பு ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் என்ற உயிர் பூசனக் கொல்லி கொண்டு விதைநேர்த்தி செய்ய வேண்டும். விதைகளை 24 மணி நேரம் ஊற வைத்து பின்பு இருட்டு அறையில் 24 மணி நேரம் வைத்து முளைக்கட்ட வைக்க வேண்டும். முளை கட்டிய விதைகளை விதைப்பதற்கு முன் ஒரு பாக்கட் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீயா உயிர் உரங்களுடன் கலந்து விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இவ்வாறு செய்தால் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் பெருமளவு குறைவதுடன் தழைச்சத்து மற்றும் மணிச்சத்து தாவரங்களுக்கு ஒருங்கே கிடைக்க வழி செய்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் புதிய தொழில் துவங்கிட நபார்டு வங்கி மூலம் வங்கி கடனுதவி

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,00:24 IST

விக்கிரவாண்டி : பனப்பாக்கம் கிராமத்தில் விவசாயிகள் குழு துவக்க விழா நடந்தது.
விக்கிரவாண்டி ஒன்றியம் பனப்பாக்கம் கிராமத்தில் ராதாபுரம் இந்தியன் வங்கி சார்பில் மகாத்மா காந்தி விவசாயிகள் குழு துவக்க விழா நடந்தது. ராதாபுரம் இந்தியன் வங்கி மேலாளர் லட்சுமி நாராயணன் முன்னிலை வகித்தார். விவசாயிகள் குழு தலைவர் செல்வகணபதி வரவேற்றார். நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் உமா மகேஸ்வரராவ், விவசாய குழுவினர் 20 பேருக்கு நபார்டு வங்கி மற்றும் இந்தியன் வங்கி சார்பில் அடையாள அட்டைகளை வழங்கி பேசியதாவது: விவசாயிகளுக்கு நபார்டு வங்கி ஆதரவுடன் இணைப்பு வங்கியான இந்தியன் வங்கி மூலம் விவசாய நிதி உதவிகள் வழங்கப்படுகிறது. விவசாய

குழுக்களுக்கு மானியத்துடன் விவசாய பயிற்சிகளும், தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. அரசு சார்பில் தரமான விவசாய இடுபொருள் கிடைக்க வழி செய்யப்படுகிறது. புதிய தொழில் முனைவோருக்கு இதர பிரிவினருக்கு 25 சதவீத மானியமும், எஸ்.சி.,எஸ்.டி., பிரிவினருக்கு 33 சதவீத மானியத்துடன் கடனுதவிதள் வழங்கப்படுகின்றன. நவம்பர் முதல் வாரத்தில் கோவை யில்  நடைபெறும் விவசாயிகளுக்கான சிறப்பு முகாமில் கலந்து கொள்ள விவசாய குழுவை சேர்ந்த 3 பேருக்கு சிறப்பு அழைப்பாளராக பங்கேற்க வாய்ப்பு கிடைத்துள்ளது.  வங்கி சலுகைகளை விவசாயிகள் பெற்று பயடைய வேண்டுகிறேன். இவ்வாறு உதவி பொதுமேலாளர் உமாமகேஸ்வரராவ் பேசினார். விழாவில் முன்னோடி வங்கி மேலாளர் பாலச்சந்திரன், வங்கி கிளை உதவி மேலாளர்கள் வினாயகம், விஜயராகவன், விவசாயிகள் குழு செயலாளர் பரசுராமன், பொரு ளாளர் ராஜேந்திரன்  கலந்து கொண்டனர். இந்தியன் வங்கி விவசாய அதிகாரி திலீப் நன்றி கூறினார்.

**நெல் பயிருக்கு துத்தநாக சத்து அவசியம் வேளாண் துணை இயக்குனர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,02:58 IST

நாமக்கல்: "நெற் பயிருக்கு துத்தநாக சத்து அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, தமிழக அரசு திட்டம் வகுத்து செயல்படுத்துகிறது' என, வேளாண் துணை இயக்குனர் நடராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: பயிர்கள் நன்கு செழித்து வளரவும் நல்ல மகசூலை தருவதற்கும் 16 வகையான சத்துக்கள் தேவைப்படுகிறது. அதில் பேரூட்டச் சத்தான தழை, மணி, சாம்பல் சத்துக்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை நுண்ணூட்ட சத்துக்கு கொடுப்பதில்லை. விவசாயிகளுக்கு நுண்ணூட்டச் சத்துக்கள் அளிப்பதன் பயன்பாடு தெரிவதில்லை. எனவே, தமிழக அரசு நெல்லுக்கு துத்தநாக சத்து அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி திட்டம் வகுத்து செயல்படுத்துகிறது.

துத்தநாக சத்து தழைச்சத்தை புரதமாக மாற்றுவதில் பெரும்பங்கு வகிக்கிறது. பயிர்களுக்கு தேவையான 80க்கும் மேற்பட்ட நொதிகளின் உருவாக்கத்துக்கு பயன்படுகிறது. பயிரின் ஒளிச்சேர்க்கை மற்றும் சுவாசத்துக்கு பயிர்கள் இரும்புச் சத்து அதிகமாக எடுத்துக் கொள்வதால், பயிர்களில் உருவாகும் எதிர்மறையான விளைவுகளை குறைக்கிறது.

துத்தநாகம் குறைபாட்டால் இளம் இலைகள் வளர்ச்சி குன்றியும், இலையின் ஓரங்கள் ஒழுங்கின்றியும் காணப்படும். இலையில் நரம்புகளுக்கு இடையில் வெளிரி காணப்படும். தண்டில் வளர்ச்சி குறைபாடு, இளம் திசுக்கள் இறப்பு மற்றும் வளமற்ற மகரந்தத்தூள் உருவாதல் இருக்கும். அதை போக்க நெற்பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட்டை மண்ணில்

இடவேண்டும்.அதுபோல் சுண்ணாம்பு சத்து அதகிமாக உள்ள மண்ணில் நெற் பயிர் நடவு செய்யும் முன், நெற்பயிர்களை இரண்டு சதவீதம் துத்தநாக ஆக்ஸைடு கரைசலில் நனைத்து நட வேண்டும். இயற்கை உரங்களை தொடர்ந்து மண்ணில் இடுவதன் மூலம் துத்தநாகச் சத்து பயிர்களுக்கு கிடைக்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நீர் வடிப்பகுதி வேளாண் திட்டத்துக்கு ரூ.60 லட்சம் ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,01:52 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம் மற்றும் நல்லம்பள்ளி வட்டாரத்தில் நீர் வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம் நடப்பாண்டு முதல் துவங்கப்படுகிறது. இதற்காக 60 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
வேளாண் இணை இயக்குனரும், திட்ட அலுவலருமான மனோகரன் வெளியிட்ட அறிக்கை: பென்னாகரம் மற்றும் நல்லம்பள்ளி வட்டார பகுதியில் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் வரும் ஐந்தாண்டுக்கு செயல்படுத்தப்படுகிறது. நல்லம்பள்ளி வட்டாரத்தில் அதியமான்கோட்டை, பாலஜங்கமனஅள்ளி, நாகர்கூடல், கும்பளபாடி, நெக்குந்தி, எர்ரபையனஅள்ளி, நத்தஅள்ளி ஆகிய பகுதிகளில் 5,137 ஹெக்டேரில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

பென்னாகரம் வட்டாரத்தில் நாகமரை, குருக்களையானூர், செல்லமுடி, கவுண்டனூர், மஞ்சாரஅள்ளி, பத்தரஅள்ளி, ஊத்துப்பள்ளத்தூர், கெண்டையனஅள்ளி, போடம்பட்டி, சாமத்தான் ஆகிய பகுதிகளில் 5,166 ஹெக்டேரில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். நல்லம்பள்ளி மற்றும் பென்னாகரம் வட்டாரத்தில் 10 ஆயிரத்து 281 ஹெக்டேரில் இத்திட்டம் செயல்படுத்திட 60 லட்சம் ரூபாய் வீதம் 12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நீர் வடிப்பகுதியில் இயற்கை வள மேலாண்மை பணிகளான கல்வரப்பு, மண் வரப்பு, பண்ணை குட்டைகள், கழிவு நீர் குட்டைகள், சிறிய தடுப்பணை, பெரிய தடுப்பணை, கால்நடை நீர் பருகும் குட்டை, நீர் செறியூட்டும் குழி மற்றும் உதிரி கற்கள் தடுப்பணை போன்ற நிலத்தில் நீர் சேமிக்கும் பணிகளில் அந்தந்த பகுதி சுய உதவிக்குழு மற்றும் பயனாளிகள் குழு செய்ய திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

அந்தந்த நீர் வடிப்பகுதிகளுக்கு தேவையான வேளாண் உயர் தொழில் நுட்ப பணிகள் செயல்படுத்தும் விதமாக அந்தந்த பகுதி விவசாய பெருமக்களை கலந்து ஆலோசித்து வீரிய ஓட்டு சூரியகாந்தி செயல் விளக்கம் போன்ற குறைந்த வயதுடைய, குறைந்த நீர் தேவையுடைய கூடுதல் வருமான் கிடைக்ககூடிய பயிர் சாகுபடி செயல் விளக்கங்கள் செய்யப்படும். விவசாய நிலத்தினை

வளமிக்க ஏரி வண்டல் இடுதல் போன்ற நில வளப்பணிகளும், நிலமற்ற விவசாய கூலி தொழிலாளர்கள் நிரந்தர நிகர வருமானம் பெறக்கூடய வகையில் விசை தெளிப்பான்கள் மானியத்தில் வழங்கிடவும் ஏற்பாடுகள் செய்யப்படும். நிலமற்ற கூலி தொழிலாளர்களுக்கு நிரந்தர வருமானம் பெறக்கூடிய வகையில் சுய உதவிக்குழு மூலம் கன்று வளர்ப்பு, ஆடு, கோழி வளர்ப்பு, சிறு தொழில்களுக்கு உதவி, சமுதாய நாற்றங்கால், மண் புழு உரம் தயாரித்தல், செங்கல் மற்றும் ஹலோ பிளாக் உற்பத்தி, கருவாடு தயாரித்தல், டெலிஃபோன் பூத், வாடகை மதி வண்டி நிலையம் அமைத்தல் போன்ற உதவிகள் நீர் வடிப்பகுதியில் உள்ள மக்களின் தேவைகளை அறிந்து சுழல் நிதி வழங்கப்படும்.நீர் வடிப்பகுதியில் உள்ள மக்கள் அந்தந்த பஞ்சாயத்து தலைவர்கள், நீர்வடிப்பகுதி பொறியாளர், நீர் வடிப்பகுதி விவசாய அலுவலர், சமூகவியலர் ஆகியோரை தொடர்பு கொண்டு திட்ட பணிகள் மூலம் பயன் பெற்றிடலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

* சுழல் நிதி வழங்கல்: மொரப்பூர் வட்டாரத்தில் வகுத்தம்பட்டியில் நடந்த மக்கள் தொடர்பு முகாமில், நவப்ரா ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் வகுத்தம்பட்டி நீர் வடிப்பகுதி கொசப்பட்டி மடதஅள்ளி மற்றும் ஒசஅள்ளி நீர்வடிப்பகுதியில் உள்ள சுய உதவிக்குழுக்கள் மற்றும் பயனாளிகள் குழுக்களுக்கு நீர்வடிப்பகுதிக்கு நான்கு குழுக்கள் வீதம் 16 குழுக்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் 4 லட்சம் ரூபாய் சுழல் நிதியை கலெக்டர் ஆனந்தகுமார் வழங்கினார். திட்ட அலுவலர் மனோகரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) மேகநாதன், வேளாண் உதவி இயக்குனர் அருணாகுமாரி, நீர் வடிப்பகுதி வளர்ச்சி அணி உறுப்பினர்கள் வடிவேலன், ஜெயசக்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**நெல் சாகுபடி முறை வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,02:53 IST

ஓசூர்: ""விவசாயிகள் நெல் சாகுபடியில் "ராஜராஜன் 1,000' நெல் தொழில்நுட்ப முறையை பின்பற்றினால் நல்ல வருமானம் பெறலாம்' என, ஓசூர் வேளாண்மை துறை உதவி இயக்குனர் நாகராஜன் தெரிவித்தார்.
அவர் வெளியிட்ட அறிக்கை: ஓசூர் வட்டாரத்தில் 500 ஹெக்டேரில் நெல் சாகுபடி நடக்கிறது. சாகுபடி செய்வதற்கான விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற "ராஜராஜன் 1,000' சாகுபடி தொழில்நுட்பம் வேளாண்மை துறையால் தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. "ராஜராஜன் 1,000' சாகுபடி தொழில்நுட்பத்தை விவசாயிகள், பொதுமக்களுக்கு விளக்கும் வகையில் துண்டு பிரசுரங்கள், சுவர் விளம்பரங்கள், வயல்பலகைகள் ஆகியவை வைக்கப்பட்டுள்ளது.

"ராஜராஜன் 1,000' சாகுபடியில் குறைந்த சாகுபடி செலவும், ஏக்கருக்கு 2 முதல் 3 கிலோ விதை போதுமானது. களைக்கருவி பயன்படுத்தினால் பயிர் வளர்ச்சி அதிகமாகிறது. 40 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை பாசன நீர் தேவை குறைகிறது. பயிர்கள் அதிக தூர்கள், கதிர்கள், அதிக மணிகள் கொண்டவையாக வருகிறது. இதனால், அதிக தானிய வைக்கோல் மகசூல் கிடைக்கிறது. இரட்டிப்பு நெல் மகசூல் கிடைக்கிறது.  விவசாயிகள் "ராஜராஜன் 1,000' தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நெல் சாகுபடியில் ஈடுபட்டால் நல்ல வருமானத்தை பெறலாம். கிராமங்கள் தோறும் "ராஜராஜன் 1,000' விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டு வருகிறது. இதில் விவசாயிகள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு வருகின்றனர். தட்டிகானப்பள்ளியில் நடந்த பேரணியை நீர்வள நிலவள திட்ட பாசன நீர் உபயோகிப்பாளர் சங்க தலைவர் ராஜப்பா துவக்கி வைத்தார். ஓசூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் நாகராஜன் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர்கள் குமரேசன், துணை வேளாண்மை அலுவலர் செல்வன், உதவி வேளாண்மை அலுவலர்கள் கணபதி, செல்லய்யா, ஆறுமுகம், சின்னசாமி மற்றும் சங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**காய்கறிகளுக்காக கருங்கல் பந்தல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,00:00 IST



புதுச்சேரி: மாநிலத்தில் முதன் முறையாக கருங்கல் பந்தல் அமைத்து துல்லிய வேளாண்மை முறையில் தோட்டப்பயிர் சாகுபடி செய்து வருகிறார் இளம் விவசாயி கருணாகரன். புதுச்சேரி, வில்லியனூர் அருகே உள்ள திருக்காஞ்சி கிராமத்தை சேர்ந்த இவர், தனது 1.25 ஏக்கர் நிலத்தில் பாகல் மற்றும் புடலங்காய் சாகுபடி செய்துள்ளார். "1.25 ஏக்கரில் கருங்கல் பந்தல் அமைக்க ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவானது. ஒரு முறை பந்தல் அமைத்தால் குறைந்தபட்சம் 20 ஆண்டுகளுக்கு தொடர்ந்து கொடி வகை பயிர்களான பாகல், பீர்க்கன், அவரை, புடலங்காய் உள்ளிட்ட எட்டு வகை பயிர்களை சாகுபடி செய்யலாம். துல்லிய வேளாண் முறையை பின்பற்றுவதால் அதிக தண்ணீர் செலவில்லை. தற்போது நாள் ஒன்றுக்கு 100 கிலோ அளவில் பாகற்காய் மற்றும் புடலங்காய் கிடைக்கிறது' என்கிறார் கருணாகரன்.

**வெள்ளைச்சோள சாகுபடி "வெரிகுட்'**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,00:00 IST



திருப்பூர்: அக்கால மக்கள் அரிசியுடன், இருங்குச் சோளம், வெள்ளைச் சோளம், வரகரிசி, கேழ்வரகு, கம்பு, சாமை, மூங்கில் அரிசி என பல தானியங்களை உணவில் பயன்படுத்தினர். இதனால், அவர்கள் ஆரோக்கியமான உடல் நிலையை பெற்று, நோய் நொடிகள் இல்லாமல், பல ஆண்டுகள் வாழ்ந்தனர். தற்போதைய இளைய தலைமுறை அப்படியில்லை. பிஸ்சா, பர்கர் என்று மேற்கத்திய உணவு முறைக்கு மாறிவிட்டனர். ஆனால், இன்றைக்கும் பல கிராமங்களில் அரிசி மட்டுமல்லாமல், பல தானியங்களை உணவில் சேர்த்துக் கொள்ளும் வழக்கம் நிலவுகிறது. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களில் வெள்ளைச் சோள சாகுபடி அதிகம். இங்கு விளையும் வெள்ளைச் சோளங்கள், திருப்பூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பதப்படுத்தப்பட்டு, இருப்பு வைக்கப்படுகிறது.

**பூத்துக் குலுங்கும் நீலக்குறிஞ்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,00:00 IST



நீலகிரி: மலையும், மலை சார்ந்த பகுதிகளில் மட்டுமே வளரும் குறிஞ்சி செடிக்கென தனித்துவமான சிறப்புக்கள் உள்ளன. குறிஞ்சி செடிகளில், மூன்று ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும் மினியேச்சர் குறிஞ்சி முதல் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் நீலக்குறிஞ்சி மலர் வரை பலவிதமான குறிஞ்சி செடிகள் நீலகிரி மலையை அலங்கரிக்கின்றன. மனித நடமாட்டம் இல்லாத மலைகளில் பூத்து வந்த குறிஞ்சி மலர்கள், தோட்டக்கலைத் துறையின் முயற்சியால் தற்போது சாலையோர பூங்காக்களிலும் பூக்கின்றன. ஊட்டியில் தற்போது இரண்டாவது சீசன் களைகட்டியுள்ளது. ஏராளமான சுற்றுலா பயணிகள், சேரிக்கிராஸ் பகுதியில் உள்ள பூங்காவில் பூத்துக் குலுங்கியுள்ள நீலக்குறிஞ்சி மலர்களை பார்த்து ரசிக்கின்றனர்

**எகிறும் எண்ணெய் விலை: துவளும் துவரம் பருப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 28,2010,23:23 IST

சிவகங்கை : தீபாவளி நெருங்குவதால், எண்ணெய் விலை உயர்ந்துள்ளது. சிவகங்கையில் மளிகை பொருள் விலை விபரம்: கடந்த வாரம் 69 க்கு விற்ற துவரம் பருப்பு-67, அதில் 2 வது ரகம் -64; 55 க்கு விற்ற தட்டப்பயறு-56, அதில் 2 வது ரகம் -48; 40 க்கு விற்ற கடலைப்பருப்பு-38, அதில் 2 வது ரகம் -36. 77க்கு விற்ற உளுந்தம் பருப்பு-75, அதில் 2 வது ரகம் -72; வெள்ளை கொண்டக்கடலை -62, கறுப்பு-36.  69க்கு விற்ற பாசி பருப்பு-68, அதில் 2 வது ரகம் -65; பாசி பயறு-62, அதில் 2 வது ரகம் -58; மொச்சை பயறு-48; 67 க்கு விற்ற வெள்ளை மொச்சை-65.

பட்டாணி- 24; வெள்ளை பட்டாணி- 22; 48 க்கு விற்ற மல்லி- 50, அதில் 2 வது ரகம்- 45; புளி-48, அதில் நயம்- 52; 40 க்கு விற்ற பொரி கடலை -42; வத்தல்-45, 2 வது ரகம்-40; மலை பூண்டு -240; தரப்பூண்டு- 120. வெல்லம் -32; கருப்பட்டி (வேம்பார்) -80; சர்க்கரை -28; சோம்பு-140; வெந்தயம் -52; கசகசா -280; சீரகம்-180; கடுகு-45; மிளகு -260; மஞ்சள் -180 ரூபாய். அரிசி (கிலோ): கல்சர் பொன்னி- 32; டீலக்ஸ் பொன்னி-28; ஐ.ஆர்.20 - 20; செல்லப்பொன்னி -22; பொன்னி பச்சரிசி - 30; ஐ.ஆர்.20 பச்சரிசி- 21; இட்லி அரிசி-23; கோதுமை -22; சோளம் -16; கம்பு -18; கேப்பை -16; வரகரிசி -36 ரூபாய். எண்ணெய்: 85 க்கு விற்ற கடலை எண்ணெய் -88; 47 க்கு விற்ற பாமாயில் -48; நல்லெண்ணெய் -90; 90 க்கு விற்ற தேங்காய் எண்ணெய் -95 ரூபாய்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 13.75%–ஆக சரிவு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் தொடர்ந்து இரண்டாவது வாரமாக, அக்டோபர் 16–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 13.75 சதவீதமாக சரிவடைந்துள்ளது. இது, அக்டோபர் 9–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 15.53*

சதவீதமாக இருந்தது.

இவ்வாரத்தில், உருளைக்கிழங்கு (49.69%), வெங்காயம் (6.93%), காய்கறிகள் (4%), கம்பு, சோளம், மீன் வகைகள், பாசி பருப்பு, உளுந்தம் பருப்பு (தலா 1%) போன்றவற்றின் விலை குறைந்திருந்தது.

அதேசமயம், கறிக்கோழி, துவரம் பருப்பு, கடல் மீன்கள் (தலா 4%), பார்லி (3%) ஆகியவற்றின் விலை அதிகரித்திருந்தது. இவை தவிர, குறிப்பிட்ட தானியங்கள், பால் பொருள்கள் போன்றவற்றின் விலையும் உயர்ந்திருந்தது. கோதுமை (6.56%) மற்றும் அரிசி (3.49%), முட்டை, இறைச்சி (தலா 28.12%) ஆகியவற்றின் விலையும் சென்ற ஆண்டின் இதே வாரத்துடன் ஒப்பிடும்போது அதிகரித்து காணப்பட்டது.

## பல இடங்களில் தென்மேற்கு பருவ மழை முடிந்தது வடகிழக்கு பருவமழை அடுத்த 48 மணி நேரத்திற்குள் தொடங்கும் வானிலை இயக்குனர் தகவல்

சென்னை, அக்.29–

தமிழ்நாட்டில் பல இடங்களில் தென்மேற்கு பருவமழை முடிந்துவிட்டது. வடகிழக்கு பருவமழை அடுத்த 48மணி நேரத்திற்குள் தொடங்கும் என்று வானிலை இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

வடகிழக்கு பருவமழை

வடகிழக்கு பருவமழை கடந்த வருடம் அக்டோபர் மாதம் 29–ந்தேதிதான் தொடங்கியது. அதுபோல இந்தவருடமும் இன்று (வெள்ளிக்கிழமை) இரவுக்குள் தொடங்கும் சூழ்நிலை உள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நேற்று மாலை கூறியதாவது:–

தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் தென்மேற்கு பருமழை முடிந்துவிட்டது. வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு சாதகமாக சூழ்நிலை உள்ளது. வடகிழக்கு பருவக்காற்று வீசத்தொடங்கி உள்ளது. ஆனாலும் வடகிழக்கு பருவமழை தொடங்கிவிட்டதாக அறிவிக்க முடியவில்லை. காரணம் பருவமழை தொடங்கியது என்றால் கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களில் மழை பெய்யவேண்டும். ஆனால் அவ்வாறு பெய்யவில்லை.

நாளைக்குள் பருவமழை தொடக்கம்

இருப்பினும் அடுத்த 48 மணிநேரத்திற்குள் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை

தொடங்கும். இன்று தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் அநேக இடங்களில் மழை பெய்யும். ஒரு சில இடங்களில் பலத்தமழை பெய்யும். சென்னையில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும்.

இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

சிவகாசியில் 21 செ.மீ.மழை

நேற்று காலை 8–30 மணி நிலவரப்படி சிவகாசியில் 21 செ.மீ.மழை பெய்துள்ளது. சேந்தமங்கலம் (நாமக்கல் மாவட்டம்), பேரையூர், கரூர், சாத்தூர், விருதுநகர் ஆகிய இடங்களில் தலா 7 செ.மீ.மழை பெய்துள்ளது. பழனியில் 6 செ.மீ., மேட்டுப்பாளையம், தாராபுரம், குடலூர், வேடச்சந்தூர் ஆகிய இடங்களில் தலா 5செ.மீ.மழை பெய்துள்ளது.

ஸ்ரீவைகுண்டம்( தூத்துக்குடி மாவட்டம்), திருப்பத்தூர், தர்மபுரி, ஓமலூர், பெரியநாயக்கன்பாளையம், உடுமலைபேட்டை ஆகிய இடங்களில் தலா 4 செ.மீ.மழை பெய்துள்ளது. செய்யூர், மதுராந்தகம், கும்பக்கோணம்,சீர்காழி மற்றும் பல இடங்களில் தலா 3 செ.மீ.மழை பதிவாகி உள்ளது.

## பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.20 ஆக உயர்த்தி தர வேண்டும்

## முதல்–அமைச்சரிடம் கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் மனு

கோவை. அக்.29–

பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.20 ஆக உயர்த்தி தர வேண்டும் என்று முதல்–அமைச்சரிடம் பால் உற்பத்தியாளர் நல சங்கத்தினர் நேரில் மனு கொடுத்துள்ளனர்.

இது குறித்து கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் நலச் சங்க காப்பாளர் எஸ்.ஆர்.ராஜகோபால், தலைவர் பாலச்சந்திரன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

பால் கொள்முதல் விலை

மாநில பால் உற்பத்தியாளர் நல சங்கம் என்ற பெயரில் கடந்த 17.5.2010–ல் அறிவிக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்குவதை நிறுத்தும் போராட்டத்தில் கோவை, திருப்பூர் மாநிலத்தின் பல பகுதிகளின் உள்ள எங்களது சங்கத்தின் உறுப்பினர்கள் யாரும் பங்கேற்க வில்லை. எனவே கூட்டுறவு சங்க பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி உடனடியாக பசும்பாலின் கொள்முதல் விலையை

லிட்டர் ஒன்றுக்கு ரூ.20 ஆகவும், எருமை பாலுக்கு லிட்டருக்கு ரூ.30 ஆகவும் உயர்த்தி வழங்க வேண்டும்.

கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தை பொறுத்தமட்டில் கடந்த சில ஆண்டுகளாக மாநிலத்தில் உள்ள அனைத்து பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களை விட கூடுதல் லாபம் ஈட்டி வருகிறது. கடந்த ஆண்டு பால் உற்பத்தி மூலம் ரூ.12 கோடி உபரி தொகை கிடைத்தது. அப்போது சங்கம் மூலம் பால் வழங்கிய பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு 50 காசு கூடுதலாக வழங்கப்பட்டது. இதே போல் இந்த ஆண்டு உபரி தொகையாக ரூ.20 கோடிக்கு மேல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் சங்கத்துக்கு பால் வழங்கிய பால் உற்பத்தியாளர்களுக்கு கூடுதலாக லிட்டர் ஒன்றுக்கு ஒரு ருபாய் 50 காசு வழங்க வேண்டும்.

காலநடை காப்பீடு திட்டம்

கோவை மாவட்டத்துக்கு பால் வழங்கும் உற்பத்தியாளர்களிடம் சுமார் 45 ஆயிரம் கறவை மாடுகள் உள்ளன. கடந்த ஆண்டுகளில் தேசிய கால்நடை காப்பீட்டுத் திட்டத்தில் மத்திய அரசின் 50 சதவீத மானியத்தில் சுமார் 20 ஆயிரம் கறவை மாடுகளுக்கு காப்பீடு செய்யப்பட்டு உள்ளது. மீதம் உள்ள 25 ஆயிரம் மாடுகளுக்கு பிரிமியம் தொகை மத்திய அரசின் 50 சதவீத மானியத்துடனும், மீதம் உள்ள 50 சதவீத தொகையை ஒன்றியமே செலுத்தி கறவை மாடுகள் இலவச காப்பீட்டு திட்டத்தை மாவட்ட ஒன்றியங்களே செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சங்கங்களுக்கு பால் வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு ஒரு கிலோ கலப்பு தீவனத்துக்கு ரூ.2 வரை மானியம் வழங்கி பால் உற்பத்தி தொழிலை ஊக்கப்படுத்த வேண்டும்.

பணி நிரந்தரம்

நீண்ட நாட்களாக கிராம பால் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு பணி நிரந்தரமும், ஊதிய உயர்வும் அளிக்க வேண்டும். தரம் மிக்க பாலை உற்பத்தி மற்றும் கொள்முதலை ஊக்கப்படுத்தும் விதமாக பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு 20 காசும், செயலர் மற்றும் உதவியாளருக்கு லிட்டருக்கு 10 காசும் ஊக்கத்தொகையாக வழங்க வேண்டும். கறவை மாடுகளுக்கு வழங்கும் தீவனம் வெட்டும் எந்திரங்களில் மின் மோட்டார் பொருத்த 75 சதவீத மானியம் வழங்க வேண்டும்.

தினந்தோறும் 1000 லிட்டர் பாலுக்கு மேல் கொள்முதல் செய்யும் சங்கங்களுக்கு நவீன கம்ப்யூட்டர் மற்றும் பிரிண்டரும், செயலர்களுக்கு தக்க பயிற்சியும் வழங்கு திட்டத்தை செயல்படுத்த வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.